வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 2/2019
வழக்குசாட்சி LW22/PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது நாசர், காவல் துறை துணை கண்காணிப்பாளர், தன்னியக்கம் மற்றும் கணினிமயமாக்கம் பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | அன்வர் பாஷா | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 06.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை காவல் துறை தலைமையகத்தில் தன்னியக்கம் மற்றும் கணினிமயமாக்கம் பிரிவுவில் காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2013 ம் தேதி காலை 04.55 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்த போது சென்னை வடக்கு காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து அழைப்பு எண் 11323ன் படி தகவலைப் பெற்று சம்பவ இடமான ஜின்டி சாலை, புழல் சைக்கிள் ஷாப் பஸ் நிறுத்தம் அருகே ஈச்சர் வேனுக்கும், டாடாஏஸ் வாகனத்திற்கும் இடையே சாலை விபத்து ஏற்பட்டுள்ளதாக இருந்து

சம்பவ இடம் சென்று சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான ஜார்ஜ் என்பவரிடம் இருந்து புகாரினைப் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 673/GNt–1/2013 குற்றப்பிரிவு 279, 337, 304(A) இதச வில் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்தேன். முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு சம்பவ இடம் சென்று சாலை விபத்தில் சம்பவ இடத்தில் இறந்து போன ராஜா என்பவரின் பிரேத்த்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 06.15 முதல் 07.15 வரை பிரேத விசாரணை முடித்தும், அதே இடத்தில் இறந்து போன மற்றொரு நபரான கதிர்வேல் என்ற பிரேத்த்தின் மீது பிரேத விசாரணை 07.15 முதல் 08.15 வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் முடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் மூலம் அரசு ஸ்டேன்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜேஷ், டேவிட் முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தாயர் செய்தேன். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.த.சா.ஆ. 4, 5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்னர் சம்பவ இடத்தில் சாட்சிகள் ஜார்ஜ், கார்த்திக், ராஜேஷ், டேவிட் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பிறகு அரசு ஸ்டேன்லி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சைப் பெற்றிருந்த ராஜாங்கம், வளர்மதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் பொன்ராஜ் என்பவரை விசாரித்து அவரிடம் இருந்து மேற்படி நபர்களுக்கான விபத்து பதிவேடுகளைப் பெற்றேன். விபத்து பதிவேடுகள் அ.த.சா. 6, 7 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அதே மருத்துவமனையில் இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சையில் இருந்த மேனகா என்பவர் மயக்க நிலையில் இருந்த்தால் வாக்குமூலம் பதிவுச் செய்ய முடியவில்லை. மேற்படி மேனகாவின் விபத்து பதிவேடு அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்னர் இவ்விபத்தில் காயமடைந்து அரசு ராஜுவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஏழுமலை மற்றும் தங்கம் என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் கீதா என்பவரை விசாரித்து அவரிடம் இருந்து மேற்படி நபர்களுக்கான விபத்து பதிவேடுகளைப் பெற்றேன். விபத்து பதிவேடுகள் அ.த.சா. 9, 10 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பிறகு மீண்டும் அரசு ஸ்டேன்லி மருத்துவமனை சென்று கதிர்வேல் மற்றும் ராஜா ஆகியோரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பாலசுப்பிரமணியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்து அவரிடம் இருந்து மேற்படி இறந்த நபர்களின் பிரேத பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றேன். அவை முறையே அ.த.சா.ஆ. 11, 12 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு 15.11.2013 அன்று தடயவியல் உதவி இயக்குநர் திரு. அழகேசன் என்பவருக்கு வேண்டுகோள் விடுத்து சம்பவ இடத்தையும், சம்பவத்தில் ஈடுபட்ட வாகனங்களையும் ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு கேட்டுக் கொண்டு அதன் படி அவர் அளித்த ஆய்வறிக்கை மற்றும் புகைப்படங்களைப் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். அந்த ஆய்வறிக்கை மற்றும் புகைப்படங்கள் (7 எண்ணிக்கை) அ.த.சா.ஆ. 13, 14 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. 16.11.2013 ம் தேதி இவ்வழக்கில் காயமடைந்து சிகிச்சையளிருந்த மேனகா என்பவர் சிகிச்சை பலனின்றி அன்று நள்ளிரவு 12.15 மணிக்கு இறந்த தகவலைப் பெற்று அரசு ஸ்டேன்லி மருத்துவமனை சென்று அவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 09.00 முதல் 10.30 வரை பிரேத விசாரணை முடித்து முதல் நிலை காவலர் திரு. மாதவன் அவர்கள் மூலம் அரசு ஸ்டேன்லி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. பாலசுப்பிரமணியம் என்பரிடம் இருந்து பிரேத பரிசோதனை அறிக்கைப் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

பிரேத பரிசோதனை அறிக்கையானது அ.த.சா.ஆ. 15 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைப் பெற்ற தங்கம் என்பவருக்கு சிகிச்சையளித்த அரசு ராஜுவ் காந்தி மருத்துவமனை மருத்துவர் ஆதிலட்சுமி என்பவரை விசாரித்து அவர் அளித்த கொடுங்காயம் என்ற சான்றை பெற்றேன். மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ. 16 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. மேலும் இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைப் பெற்ற ராஜாங்கம் என்பவருக்கு சிகிச்சையளித்த அரசு ஸ்டேன்லி மருத்துவமனை மருத்துவர் வெங்கடேசன் என்பவரை விசாரித்து அவர் அளித்த காயசான்றை பெற்றேன். மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ. 17 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்பு 25.11.2013 இவ்விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வேன் வாகன ஓட்டுநர் எதிரி அறிவு என்பவரை அவர் உறவினர் முருகன் என்பவர் நிலையம் ஆஜர் செய்து விசாரணைக்கு பின் அவரை காலை 10.30 மணிக்கு நிலையத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மேற்படி முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

பிறகு இவ்வழக்கில் சம்மந்தப்பட் ஈச்சர் வாகனம் TN 22 AS4363 மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. ஜெய்மனோகர் என்பவரிடம் இருந்து ஆய்வறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ. 18 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் 10.02.2014 அன்று இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைப் பெற்ற ஏழுமலை என்பவருக்கு சிகிச்சையளித்த அரசு ராஜுவ் காந்தி மருத்துவமனை மருத்துவர் காளிராஜ் என்பவரை விசாரித்து அவர் அளித்த சொற்பகாயம் என்ற சான்றை பெற்றேன். மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ. 19 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைப் பெற்ற வளர்மதி என்பவருக்கு சிகிச்சையளித்த சுந்தரம் மெடிக்கல் பவுன்டேஷன் மருத்துவமனை மருத்துவர் சுதாகர் என்பவரை விசாரித்து அவர் அளித்த கொடுங்காயம் என்ற சான்றை பெற்றேன். மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ. 20 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பிறகு 24.02.2014 இவ்வழக்கில் சம்மந்தப்பட் டாடாஏஸ் வாகனம் TN 18 M 7562 மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. நெடுமாறன் என்பவரிடம் இருந்து ஆய்வறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ. 21 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337, 304(A) இதச விலிருந்து 279, 337, 338, 304(A) என பிரிவு மாற்றி எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ. 22 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். சம்பவ நேரம் அதிகாலை என்றால் சரிதான். இருட்டு நேரம் என்றால் இல்லை. விடியல் நேரம். 04.30 மணி என்பது இருட்டு நேரம் என்றால் ஆமாம். தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் மற்ற நிறுத்தங்கள் அனைத்தும் சர்வீஸ் சாலையில் தான் அனுமதிக்கப்படும் என்றால் ஆமாம். சர்வீஸ் சாலையில் வாகனத்தை நிறுத்தி ஆட்களை ஏற்றாமல் நெடுஞ்சாலையில் நிறுத்தி ஏற்றினால் அது குற்றம் என்றால் ஆமாம். சம்பவம் தேசிய நெடுஞ்சாலையில் ஆட்களை ஏற்றும்போது நடந்தது என்றால் ஆமாம். மாதிரி வரைபடத்தில் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் வழக்கமாக அங்கு தான் பேருந்து நிறுத்தம் இருந்ததால் குறியீடுச் செய்து காட்டப்பட்டது. சம்பவ இடம் சென்றிருந்தால் சர்வீஸ் சாலையில் பேருந்து நிறுத்தம் இருப்பதை குறியீடுச் செய்து காட்டி இருப்போம் என்றால் சரியல்ல.

டாடாஏஸ் வாகனம் காய்கறி, சரக்கு ஏற்றும் வண்டி என்றால் ஆமாம். ஆட்களை ஏற்றும் வண்டி அல்ல என்றால் ஆமாம். சம்பவத்தில் எத்தனை நபர்களை டாடாஏஸ் ஏற்றிக் கொண்டு சென்றது என்றால் டிரைவர் அல்லாது 7 நபர்கள். மொத்தம் 8 நபர்கள். ஆட்களை ஏற்றிச் சென்றதற்காக டாடாஏஸ் டிரைவர் மீது வழக்கு ஏதும் பதிவுச் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணிக்க அனுமதி என்றால் டிரைவர் மற்றும் உடன் ஒருவர் பயணிக்க அனுமதி உண்டு. அதிக நபர்களை ஏற்றிச் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் ஆட்களை ஏற்றிச் சென்றது தவறு. ஆனால் அதனால் விபத்து ஏற்பட்டது என்பது சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு காலதாமதமாக டாடாஏஸ் வாகனம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

வாகன ஆவணங்கள் இல்லாததால் 3 மாதம் காலதாமதமாக சோதனைக்கு அனுப்பப்பட்டது. ஆவணம் காலதாமதமாக பெறப்பட்டதால் ஆய்வறிக்கை பெறுவது தாமதம் என இறுதி அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. டாடாஏஸ் வாகனம் ஓட்டிய நபருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் , காப்பீடு, மற்ற வாகன ஆவணங்கள் இல்லாமல் வண்டியை இயக்கியுள்ளார் என்றால் ஆமாம். பாதிக்கப்பட்ட நபர்கள் வந்த வாகனத்தினை ஓட்டிய நபருக்கு ஓட்டுவதற்கான தகுதிச் சான்று இல்லை என்றால் சரிதான். இறந்த நபர்களில் ஒரு நபர் பஞ்சாயத்து தலைவர் என்றால் விசாரணையில் குறிப்பிடப்படவில்லை. விபத்தில் குற்றவாளியை நிலைய பிணையில் விடுவார்கள் என்றால் இல்லை. 2016க்கு பிறகு நிலைய பிணை அனுமதிக்கப்பட்டது. இறந்த நபர் பஞ்சாயத்து தலைவர் என்பதால் குற்றவாளி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரியல்ல. யார் உத்தரவின் பேரில் சம்பவ இடத்தில் தடய அறிவியல் நிபுணர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் எவர் உத்தரவும் பெற தேவையில்லை.

புலன் விசாரணை அதிகாரியான நானாக தான் கூறினேன். ஆய்வறிக்கையில் டயர் தடமானது எவ்வளவு தொலைவு என்பதனை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் இல்லை. 10 – 15 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து தலைவருக்கு இழப்பீடு பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக டாடா ஏஸ் வாகனத்தினை ஓட்டி வந்த நபர் எவ்வித ஆவணங்களும் இன்றி விதிமுறைகளை பின்பற்றாமல் வாகனத்தினை இயக்கிய நிலையில், இவ்வழக்கினை எந்த விதிமீறலும் இன்றி வாகனத்தினை இயக்கிச் சென்ற எதிரி மீது பதிவுச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.